BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் சுற்றுலா மற்றும் உள்ளூர் நிகழ்ச்சிகளுக்கு உதவும் வகையிலான மானியம் வழங்குவதற்கான விண்ணப்பங்களை வரவேற்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (நவம்பர் 25, 2021) – இன்றைய தினம் துவங்கி, இரண்டு வகை சமூக மானியம் வழங்கும் வாய்ப்புக்களுக்கான விண்ணப்பங்களை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ஏற்றுக்கொள்கிறது; இதில் ஒன்று, உள்ளூர் விழாக்களுக்கு ஆதரவளிப்பதற்காகவும், மற்றும் இன்னொன்று விளையாட்டு சுற்றுலா முனைப்புக்களை உற்சாகப்படுத்துவதற்கும் ஆனது. இந்த முதலீடுகள் உள்ளூர் சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தை கோவிட்-19 தாக்கத்திலிருந்து மீட்டெடுத்து  ஆதரவளிப்பதில் உதவும்.

**விளையாட்டு சுற்றுலா உபசரிப்பு திட்ட நிரலாக்கம்**
விளையாட்டு சுற்றுலா நிகழ்ச்சிகள், நகரைக் கட்டமைப்பதிலும், உள்ளூர் பொருளாதாரத்தில் சாதகமான தாக்கம் உருவாக்குவதிலும், சமுதாய முன்னேற்றம் மற்றும் குடிமக்களின் பெருமையைப் பறைசாற்றுவதிலும் முக்கியமான பங்காற்றும். விளையாட்டு சுற்றுலா உபசரிப்பு திட்ட நிரலாக்கம் (STHP) என்பது சுற்றுலாவரும் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரித்து பொருளாதார செழிப்பினை அதிகரிக்கின்ற வகையில் ப்ராம்ப்ட்டன் நகரில் உபசரிப்பு செய்யப்படும்; உள்ளூர் விளையாட்டு சுற்றுலா வகையில், நிகழ்ச்சி ஒன்றுக்கு $50,000 நிதி உதவி வழங்கப்படுகிறது.

விண்ணப்பிக்கும் தகுதி கொண்டிருப்பதற்கு, நிகழ்ச்சி ஒழுங்கமைக்கும் அமைப்புக்கள் லாபநோக்கில்லாத அமைப்புகள் என பதிவு பெற்றிருக்க வேண்டும்; நிகழ்ச்சிகள் ப்ராம்ப்ட்டன் நகரிலேயே 2022 ஆம் ஆண்டின் கேலண்டர் நாட்களில் நடத்தப்பட வேண்டும், மற்றும் ஆண்டொன்றுக்கு, ஒரு நிறுவன அமைப்பு அதிகபட்சம், இரண்டு விளையாட்டு சுற்றுலா நிகழ்ச்சிகளுக்காக விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் 2022, ஜனவரி 7 ஆம் தேதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கான மார்க்வீ நிதி**
விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கான மார்க்வீ நிதி (MFE) என்பது, கூட்டு முயற்சி மற்றும் கலாச்சார மாஸ்டர் திட்டத்தின் இலக்குகள் மற்றும் செயல்பாடுகளை முன்னுரிமை கொண்ட விஷயமாக்கி, ப்ராம்ப்ட்டன் நகரின் அடையாளத்தைக் கட்டமைப்பதில் நகரசபை கவுன்சில் கால முன்னுரிமை கொண்ட விஷயங்களுடன் ஒத்துப்போகும் வகையில் நன்கு தம்மை நிலைநாட்டிக்கொண்ட ப்ராம்ப்ட்டன் விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு நிதியுதவி அளிக்கிறது..

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் அந்தந்த கேலண்டர் வருடத்தின்போது ஒரே ஒரு முறை மட்டும், நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக ஆகும் செலவில், 50% வரை நிதியுதவி பெறலாம்; அதிகபட்சமாக $60,000

The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON  L6Y 4R2  311  TTY: 905.874.2130

வரை கிடைக்கும். 2022 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளுக்கான விண்ணப்பங்கள் 2022, ஜனவரி 7 ஆம் தேதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**விண்ணப்பிக்க விருப்பம் கொண்டுள்ளீர்களா?**
விளையாட்டு சுற்றுலா உபசரிப்பு திட்ட நிரல் மற்றும் விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கான மார்க்வீ நிதி ஆகிய இரண்டுக்குமேயான தகுதி தெரிந்துகொள்ளவும், மற்றும் விண்ணப்பம் செய்யும் தகவல்களுக்கும் வருகை தரவும்: brampton.ca/communitygrants

**அறிஞர் கூற்றுக்கள்**

"கோவிட்-19 தொற்றுநோயிலிருந்து நாம் மீண்டு வரும் தொடர் நிகழ்வுகளில், ப்ராம்ப்ட்டனின் பல கலவையையும் கொண்டாடும் நிகழ்வுகளை ஆதரிப்பதும், நம்மை நாம் ஒன்றிணைத்துகொள்வதுவும் முக்கியமாகும். ப்ராம்ப்ட்டன் வாய்ப்புகளுக்கான நகரமாகும். அடுத்த ஆண்டில் நேரில் கண்டுகளிக்கும் வகையில், மீண்டும் இந்த நிகழ்வுகள் நடைபெறவிருப்பதை, மற்றும் எங்கள் சமூகத்தைக் கொண்டாடுவதை நான் எதிர்நோக்கி எதிர்நோக்கி காத்திருக்கிறேன்.

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"விளையாட்டு சுற்றுலா உபசரிப்பு திட்ட நிரல் மற்றும் விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கான மார்க்வீ நிதி ஆகியவற்றிற்காக மற்றொரு சுற்று விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். நமது சமூகத்தை வலுப்படுத்தவும், நமது கலாச்சாரத்தை கொண்டாடவும், நகரத்திற்கு பொருளாதார செழிப்பை வழங்கவும் இந்த நிதியுதவிகளின் மூலம் நிகழ்வுகளை ஆதரிப்பதில் ப்ராம்ப்ட்டன் பெருமிதம் கொள்கிறது.

- *ஹர்கிரத் சிங், நகர கவுன்சிலர், வார்டுகள் 9 & 10; தலைவர், பெருநிறுவன சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

" சுற்றுலா, பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக சுறுசுறுப்பு ஆகியவற்றை ஆதரிக்கும் நிகழ்வுகளுக்கு தொடர்ந்து ஆதரவு மற்றும் ஊக்குவிப்பு அளிப்பதற்காக ப்ராம்ப்ட்டன் நகரம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. ப்ராம்ப்ட்டன் வாய்ப்புகளுக்கான ஒரு நகரம் ஆகும் மற்றும் இந்த நிதியளிப்பு வழங்குவதானது, சமூகத்திற்கான எங்கள் அர்ப்பணிப்பு மற்றும் எங்கள் ஒன்றிணைந்த கோவிட்-19 மீட்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை எடுத்தியம்புகின்றன.

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

.

**ஊடக தொடர்பு**

மோனிக்கா துக்கல்

ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு

யுக்திரீதியான தகவல் தொடர்பு

ப்ராம்ப்ட்டன் நகரம்

905-874-3426 | Monika.Duggal@brampton.ca